# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 17, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு—2024

## 1993, ஏப்ரல் 30, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு, இரா, முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல், "

அன்பு கலந்து வஞ்சனை இல்லாது மெய்யான அறப் பொருள் கண்டவர்களின் வாயினின்று வரும் சொல் இன் சொல்லாகவே இருக்கும்,

### 1. வினாக்கள்—விடைகள்,

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண் 541—திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு சட்ட அமைச்சர்,

541—

### புதுக்கோட்டையில் சட்டக் கல்லூரி

*10556—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் சட்டக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே, அன்றைய தினம் தலைமை அமைச்சராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் மன்னர் மானியத்தை ஒழிக்கின்றபோது, அங்கே மிகச் சிறப்பாக ஆட்சி செய்துகொண்டிருந்த அந்தப் புதுக்கோட்டையினுடைய தேவஸ்தானத்திலே அன்றைக்கு லால்பகதூர் சாஸ்திரிக்கு உதவுகின்ற வகையிலே நிபந்தனையின்றி தங்களுடைய சொத்துக்களை ஒப்படைத்தார்கள். அப்படி ஒப்படைக்கின்றபோது, மிகச் சிறந்த ஒரு நீதி நிர்வாகத்தை அங்கே கொண்டிருந்தார்கள். ஆகவே புதுக்கோட்டையிலே அரசின் சார்பிலே சட்டக் கல்லூரி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டக் கல்லூரியிலே சேர்ந்து (குறுக்கீடுகள்) சட்டக் கல்வி பயில வேண்டுமென்ற ஆர்வம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்கள் இப்படி வந்து அமைச்சர்களுக்குத் தொந்தரவு செய்யக் கூடாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ் நாட்டில் இன்றைக்கு நான்கு கல்லூரிகள் இருக்கின்றன. கோயம்புத்தூர், மதுரை, சென்னை, திருச்சி ஆகிய நான்கு இடங்களில். இந்த நான்கு கல்லூரிகளிலே 1,560 இடங்கள் உள்ளன. ஆனால், சென்ற ஆண்டு மட்டும் 1992-93-ல் 14 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆக சட்டக் கல்வி படிக்க வேண்டுமென்ற ஆர்வமும், அவசியமும், தேவையும் இருக்கிற காரணத்தால் விரைவில் எந்தெந்த இடங்களில் சட்டக் கல்லூரி துவக்க வேண்டுமோ அதனை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவிப்பார்கள்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூரில் இருப்பது போன்று அந்தத் தனியார் கல்லூரிகளை, நம்முடைய அரசும், புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் துவங்க முன்வருமானால் அது பற்றி அரசு பரிசீலித்து அவர்களுக்குத் துவங்குவதற்கு அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இது கொள்கைப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 542, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

542—

செங்கம் உரிமையியல் நீதிமன்றம்

*11315-ஏ—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்ட உரிமையியல் நீதிமன்றத்தைத் திருவண்ணாமலையிலிருந்து செங்கத்திற்கு மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இச்செயற்குறிப்பு குறித்து உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டமானது, செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு தொகுதி ஆகிய இரண்டு தொகுதிகளை உள்ளடக்கியது. இதன் ஜனத்தொகை 5 இலட்சம் உள்ளது. கிட்டத்தட்ட 75 விழுக்காடு மக்கள் தங்கள் உரிமை வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத அளவில் இருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக வழக்குகள் விசாரணைக்கு வராமலேயே இருக்கின்றன. அதுமட்டுமல்ல, நிலுவையில் இருக்கும் வழக்குகள், தாக்கல் செய்யப்படும் வழக்குகள் மூன்றில் இரண்டு பாகம் செங்கம் வட்டத்தில்தான் இருக்கிறது. எனவே, அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கத்தில், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல ஒரு டிஸ்டிரிக்ட்டு முன்சீப் கோர்ட்டு அமைக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது. அது குறித்து நீதிமன்றம் முழு அங்கீகாரம் அளித்துவிட்டது. என்றாலும் சில தகவல்கள் கேட்டு உயர்நீதிமன்றத்திற்கு தமிழக அரசு எழுதியிருக்கிறது. விரைவில் பதில் வரும். வந்தவுடன் செங்கத்தில் நீதிமன்றம் அமையும்.